# விரைவில் வடக்கு மண்டல நிர்வாகிகள் ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர் சந்திப்பு!

## திருவண்ணாமலையில் மண்டல இளைஞர் அணி நிர்வாகிகளுடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை!

**திருவண்ணாமலை,டிச.6-**

**திருவண்ணாமலையில் விரைவில் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு, பிரமாண்டமான முறையில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கிறது.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் இந்த சந்திப்பு நடைபெறும் இடத்தை, நேற்று பார்வையிட்டு, வடக்கு மண்டலத்தைச் சேர்ந்த பொறுப்பு அமைச்சர்கள்-மாவட்டக் கழகச் செயலாளர்கள்-சட்டமன்ற உறுப்பினர்கள்-நாடாளுமன்ற உறுப்பினர்கள்- இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள்- மாவட்ட-மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆகியோருடன் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.**

**இதைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

ஒரு குறுகிய கால அறிவிப்பில் அத்தனை பேரும் இந்த மண்டலத்திலிருந்து, இன்றைக்கு திருவண்ணாமலைக்கு இந்த நிகழ்ச்சிக்காக வந்திருக்கிறீர்கள். முதலில் அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மிக மிக முக்கியமான நேரம்

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் சென்னையில் ஆரம்பித்து, தருமபுரி மாவட்டம் வரைக்கும் 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணியின் மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் என்று நீங்கள் அத்தனை பேரும் வருகை தந்து பங்கேற்று இருக்கிறீர்கள். மிக மிக முக்கியமான நேரத்தில் இன்றைக்கு இந்த ஆலோசனைக் கூட்டத்தை நாம் நடத்தி இருக்கிறோம். முதலில் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஒரு மாத காலமாக இந்த எஸ்.ஐ.ஆர். (SIR - Special Intensive Revision) திட்டத்தில் நீங்கள் அத்தனை பேரும் களத்தில் இறங்கி, மிகச் சிறப்பாக வாக்குரிமைப் பட்டியலில் பெயர் சேர்ப்பதில் உங்களுடைய பணிகளைச் சிறப்பாக செய்திருக்கிறீர்கள். தலைவர் அவர்களும் தொடர்ந்து உங்கள் ஒவ்வொருவரோடும் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அதனைத் தினமும் பின்தொடர்ந்து (Follow up) கொண்டிருக்கிறார். நானும் என்னால் முடிந்த அளவிற்கு உங்களிடத்தில், ஒவ்வொரு மாவட்டச் செயலாளரையும் சந்திக்கும்போது, அது சரியாகப் போய்க்கொண்டிருக்கிறதா என்பதைக் கேட்டு வருகிறேன்.

மிகச் சிறப்பாக ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் இன்னொருவரோடு போட்டி போட்டுக்கொண்டு, எந்த மாவட்டம் அதிகமாகச் சேர்த்திருக்கிறது? அதுவும் நம்முடைய வாக்காளர்களை யார் அதிகமாகச் சேர்த்திருக்கிறார்கள் என்பதை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறீர்கள். முதலில் அதற்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இளைஞர் அணியின் செயல்பாடுகளும் சாதனைகளும்

இன்றைக்கு இளைஞர் அணியைப் பொறுத்தவரைக்கும், கழகத்திற்கு வலு சேர்க்கின்ற பல்வேறு பணிகளைச் செய்து வருகிறோம். சென்ற மாதம் இளைஞர் அணி சார்பாக அறிவுத் திருவிழாவை, சென்னையில் வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். அறிவுத்தளத்தில் மட்டுமல்ல, களத்திலும் இளைஞர் அணி இன்றைக்குச் சிறப்பாக செய்துகொண்டிருக்கிறது என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம் இன்றைக்கு வந்திருக்கிறது. அந்த வலிமையை மேலும் கூட்டுகின்ற வகையில்தான் இளைஞர் அணியின் வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பையே மாநாடு போலச் சிறப்பாக நடத்துவதற்காக நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

உங்களுக்குத் தெரியும், ஏற்கனவே அண்ணன் இராஜேந்திரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொன்னார், மக்களவைத் தேர்தலுக்கு முன் சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை மிகச் சிறப்பாக, வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். அந்த மாநாட்டின் வெற்றிக்கு இங்கு வந்திருக்கக்கூடிய மாவட்டக் கழகச் செயலாளர்கள், உங்கள் அத்தனை பேரின் உழைப்பும் மிக மிக முக்கியமான காரணமாக இருந்தது. அதைத் தொடர்ந்து இளைஞர் அணியின் பல்வேறு பணிகளை, உங்களின் ஒத்துழைப்போடு தொடர்ந்து செய்து வருகிறோம்.

தொகுதிக்கு ஒரு இளைஞர் அணி நூலகத்தை கிட்டத்தட்ட 125 தொகுதிகளில் இது வரைக்கும் திறந்திருக்கிறோம். அதேபோல பயிற்சிப் பாசறைக் கூட்டத்தை 234 தொகுதிகளிலும் தலைவரின் உத்தரவுக்கு இணங்கச் சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறோம். இளம் பேச்சாளர்கள் தேர்வையும் உங்களின் ஒத்துழைப்போடு தலைவர் 100 இளம்பேச்சாளர்கள் தேர்வு செய்யச் சொன்னார், தமிழ்நாடு முழுவதும் பேச்சுப் போட்டியை நடத்தி, உங்களின் ஒத்துழைப்போடு, உங்களுடைய ஆதரவோடு நடத்தி இன்றைக்கு கிட்டத்தட்ட 200 இளம்பேச்சாளர்களைத் தலைமைக்குக் கொடுத்திருக்கிறோம் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் இவையெல்லாம் சிறப்பாக நடந்திருக்காது. உங்களுடைய ஆதரவு தொடர்ந்து இளைஞர் அணிக்கு வந்துகொண்டிருக்கிறது.

### தாய்க் கழக நிர்வாகிகள்

எந்தப் பணியாக இருந்தாலும், அது தாய்க் கழக நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசனை செய்து, உங்களுடைய கருத்துகளையும் உள்வாங்கி, தலைவருடைய வழிகாட்டுதல்படி அதைச் செய்து வருகிறோம். மிக மிக முக்கியமான காரணம், இங்கு வந்திருக்கக்கூடிய மாவட்டச் செயலாளர்களாகட்டும், சட்டமன்ற உறுப்பினர்களாகட்டும், நீங்கள் எல்லாம் இளைஞர் அணியில் பயிற்சி எடுத்து, உங்களுடைய உழைப்பைக் காட்டி அதன் பிறகு மாவட்டச் செயலாளராக உயர்ந்துள்ளீர்கள். அதனால்தான் உங்களுக்கு இளைஞர் அணியின் பணிகளில் எல்லாம் எப்போதும் கொஞ்சம் கூடுதல் கவனம் எடுத்து, கூடுதல் ஆர்வம் எடுத்து நீங்கள் அத்தனை பேரும் பணியாற்றி வருகிறீர்கள்.

அதைத் தொடர்ந்து அடுத்த கட்டப் பணியாக இளைஞர் அணிக்கு நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்களைத் தொடர்ந்து நியமித்து வருகிறோம். முரசொலியில் அதற்கான அறிவிப்பு தினமும் வந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் இப்படி கிளை, பாகம் வரைக்கும் நியமனங்களை நிறைவு செய்தால், இளைஞர் அணியில், நிர்வாகிகள் மட்டும் கிட்டத்தட்ட 5 இலட்சம் நிர்வாகிகள் வருவார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே இருக்கக்கூடிய எந்த அணிக்கும் 5 இலட்சம் நிர்வாகிகள் என்பது வரலாற்றிலேயே கிடையாது. அது தி.மு.க.வுக்குத்தான் இன்றைக்கு அந்த வரலாற்றைப் படைக்க இருக்கிறோம்.

இன்றைக்கு இந்தியாவிலே பல கட்சிகள் பூத் கமிட்டி அமைப்பதற்கே சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிற நேரத்தில், ஒவ்வொரு பூத்துக்கும் ஒரு இளைஞர் அணி நிர்வாகியை நாம் நியமித்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, இந்த வடக்கு மண்டலத்தில் இருக்கக்கூடிய 91 தொகுதியிலும் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அதில் 60 தொகுதிகளுக்கான அறிவிப்பு ஏற்கனவே முரசொலியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

### நிர்வாகிகள் அறிவிப்பு

இந்த வடக்கு மண்டலத்தில் மட்டும் 1,25,000 இளைஞர் அணி நிர்வாகிகள் பொறுப்பில் வர இருக்கிறார்கள். இதில் 30 தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 42,000 நிர்வாகிகளை நானே ஒவ்வொரு தொகுதிக்குப் போகும்போது, அவர்களை நேரடியாகச் சந்தித்து, அவர்கள் ஒவ்வொருவருடனும் தனித்தனியாகப் புகைப்படம் எடுத்திருக்கிறேன். அவர்களோடு உரையாடி இருக்கிறேன்.

இந்த புதிய நிர்வாகிகள் யாரும் அவ்வளவு எளிதாகப் பொறுப்புக்கு வரவில்லை. வந்திருக்கக்கூடிய மாவட்டச் செயலாளர்கள் உங்களுக்கே தெரியும். உங்களிடம் வெறும் பரிந்துரைக் கடிதம் வாங்கி, உடனே அதை அறிவிப்பாக வெளியிடவில்லை. அதில் சில மாவட்டச் செயலாளர்களுக்கு என்மேல் கொஞ்சம் வருத்தமும் இருக்கத்தான் செய்யும். முதலில் மாவட்ட, ஒன்றிய, நகரச் செயலாளர்களிடம் பரிந்துரைக் கடிதத்தை வாங்கினோம். அதன்படி அன்பகத்தில் இதற்காகவே ஒரு தனியாக ஒரு குழு அமைத்து, நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் தொலைபேசியில் அழைத்து, அவர்களுடன் பேசினோம். அவர்களைச் சரி பார்த்தோம்.

கழகத்தில் அவர்களுக்கு உண்மையாகவே ஆர்வம் இருக்கிறதா? இளைஞர் அணி பணிகளில் அவர்களின் செயல்பாடு இருக்கிறதா? அவர்களுக்கு விருப்பம் இருக்கிறதா? கட்சிப் பின்புலம் இருக்கிறதா? அவர்கள் நம் கட்சி குடும்பத்தைச் சேர்ந்தவர்களா? திராவிட இயக்கக் கொள்கை தெரிந்தவர்களா? அவர்கள் கட்சியில் பணியாற்றுவதற்கு ஆர்வமாக இருக்கிறார்களா? சமூக வலைதளத்தில் சிறப்பான பணியாற்றுகிறார்களா? இப்படி அனைத்தையும் விசாரித்து, அதன்பிறகுதான் அந்த நிர்வாகிகளின் அறிவிப்பை முரசொலியில் ஒவ்வொரு தொகுதியாக அறிவித்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்களை எல்லாம் ஓர் இடத்தில் வரவழைத்து, அவர்களை உற்சாகப்படுத்தி, தலைவர் அவர்களை நேரடியாகச் சந்திக்க வைக்க வேண்டும் என்ற அந்த ஒரே எண்ணத்தில் தான் இன்றைக்கு இந்த நிர்வாகிகள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை நிர்வாகிகள் சந்திப்பின் நோக்கம் முதல் கட்டமாக திருவண்ணாமலையில் வடக்கு மண்டலத்து நிர்வாகிகள் கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர் வருகிறார்கள். அந்த ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேரையும் ஒரே இடத்தில் வரவழைத்து, தலைவர் அவர்கள் இறுதியாக சிறப்புரையாற்ற இருக்கிறார்கள்.

இந்த நிர்வாகிகள் சந்திப்பை நடத்துவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முக்கிய காரணம், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிக்கு அந்தப் புதிதாக வந்திருக்கக்கூடிய இளைஞர் அணித் தம்பிகளை நாம் தயார்படுத்த வேண்டும். தேர்தலுக்காக மட்டுமல்ல, நம்முடைய கொள்கைகளை, அரசின் சாதனைகளை உள்வாங்கி, நம்முடைய கழகத்தின் எதிர்காலத்தை வலிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சந்திப்பு.

> **இந்த நிர்வாகிகள் சந்திப்பை நடத்துவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முக்கிய காரணம், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிக்கு அந்தப் புதிதாக வந்திருக்கக்கூடிய இளைஞர் அணித் தம்பிகளை நாம் தயார்படுத்த வேண்டும். தேர்தலுக்காக மட்டுமல்ல, நம்முடைய கொள்கைகளை, அரசின் சாதனைகளை உள்வாங்கி, நம்முடைய கழகத்தின் எதிர்காலத்தை வலிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சந்திப்பு.**

இந்த நிர்வாகிகள் சந்திப்பு, தேர்தல் நேரத்தில் நடந்தாலும், இது வெறுமனே தேர்தலுக்காக நடக்கக்கூடிய சந்திப்பு கிடையாது. இப்போது பல இளைஞர்கள், பல இயக்கங்களுக்குப் போகிறார்கள் என்ற ஒரு பிம்பத்தைத் தொலைக்காட்சிகளும், நடுநிலையாளர்கள் என்று சொல்லக்கூடிய பலபேரும் ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அது கிடையாது.

### சந்திப்புக்கான ஏற்பாடுகள்

தி.மு.க.வில் இன்னும் இளைஞர்களின் ஆதரவு இருக்கிறது. தி.மு.க.வி-வில் இளைஞர்கள் வந்து இணைகிறார்கள். அப்படிப்பட்ட அந்த இளைஞர்களை நாம் கொள்கை வழிப்படுத்த வேண்டும். நம்முடைய அரசியல் வழிப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சந்திப்பு.

இன்றைக்கு அந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகள், திருவண்ணாமலையில் சிறப்பாக நடத்துவதற்காக, நானும், நம்முடைய அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களும் அங்கு சென்று அவற்றையெல்லாம் பார்வையிட்டு விட்டுத்தான் இங்கு வந்திருக்கிறோம். இதற்கான பணிகளை அண்ணன் எ.வ.வேலு அவர்கள் தொடர்ந்து கவனித்து வருகிறார்கள். நாங்களும் அன்பகத்திலிருந்து நம்முடைய குழு மூலமாக அதையெல்லாம் பின்தொடர்ந்து வருகிறோம்.

இந்தச் சூழலில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர்கள், மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், எம்.எல்.ஏ.க்கள் இவர்களின் பணிகள் என்னென்ன? இளைஞர் அணி மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் எந்தெந்த விஷயங்களைப் பின்தொடர வேண்டும் என்ற விஷயத்தை ஆலோசிக்கத்தான் இந்தக் கூட்டம் இன்றைக்கு கூட்டப்பட்டது.

நம்முடைய முதல் இலக்கு, தேர்வு செய்யப்பட்ட அந்த ஒரு லட்சத்து 25 ஆயிரம் நிர்வாகிகள் 100 சதவிகிதம் நிச்சயமாக அந்த நிகழ்ச்சிக்கு வர வேண்டும் என்பதுதான். இதற்காகத் தனியாக அன்றைக்கு வருகைப் பதிவேடு எல்லாம் எடுக்கப்படும். நிச்சயமாக அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் பட்டியல் அன்பகத்திலும் இருக்கிறது, முரசொலியில் வந்திருக்கிறது. அவர்களிடம் ஐ.டி. கார்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 30 தொகுதியில் நானே சென்று நேரில் சந்தித்துள்ளேன். அந்தப் பட்டியலில் யார் இருக்கிறார்களோ அவர்களை தயவுசெய்து ஒருங்கிணைத்து நீங்கள் அழைத்து வர வேண்டும். அப்படி அழைத்து வரவேண்டியது நம் அனைவரின் கடமை என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உறுதி செய்ய வேண்டும்

மாலை 3 மணிக்கு அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகளும் திடலில் கூடிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதை நாம் உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு ஒன்றியம், நகரம், பேரூரிலிருந்து இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளை இந்தச் சந்திப்புக்கு அழைத்து வருவதற்கான பணிகளையும், அந்த வசதிகளையும், ஏற்பாடுகளையும் மாவட்ட அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி அமைப்பாளர்கள் இவர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்ய வேண்டும். உங்களுக்கு இளைஞர் அணி நிர்வாகிகள், நம் அன்பகத்திலிருந்து இருக்கக்கூடிய குழுவினர் முழு அளவில் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

இது சபரிமலை சீசன் உங்கள் எல்லோருக்கும் தெரியும். எனவே, போக்குவரத்து வசதிகளை முறையாக ஏற்பாடு செய்து கொள்ளவும்., நீங்கள் அதற்குரிய முன் ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டும். ஒரு தொகுதிக்கு 40-லிருந்து 50 பேருந்துகள் நிச்சயமாகத் தேவைப்படும். அதற்கான முன்னேற்பாடுகளை நீங்கள் செய்துகொள்ள வேண்டும். ஏனென்றால், கடைசி நேர நெருக்கடிகளை நாம் தவிர்க்க வேண்டும். இப்படிப் பேருந்துகளை, வண்டிகளை உறுதி செய்கின்ற பணிகளை நீங்கள் உங்களுக்குள் பேசி, ஒவ்வொரு தொகுதியாக, மாவட்டமாகப் பேசி ஒருங்கிணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### அச்சிட்ட வடிவம்

புதிய நிர்வாகிகளின் பட்டியல் உங்கள் அனைவரின் கையிலும் நிச்சயம் இருக்கும். மீண்டும் நம்முடைய அன்பகத்திலிருந்து அது பி.டி.எஃப் வடிவில் உங்களுக்கு வாட்ஸ்அப் மூலமாகவோ அல்லது அச்சிட்ட வடிவமாகவோ (Hard Copy) நிச்சயம் உங்களுக்கு வழங்கப்படும். அந்தப் பட்டியலை நீங்கள் எல்லாரும் பார்த்து, சரிசெய்து, அதை ஒவ்வொருவராகச் சரிபார்த்து நிகழ்ச்சிக்கு அழைத்து வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய மாவட்டங்களிலிருந்து ஒரு மணி நேரத்துக்குள் திடலுக்கு வந்துவிடலாம். ஆனால், சென்னை மாதிரி தூரமான ஊர்களிலிருந்து வரும்போது கிட்டத்தட்ட மூன்றிலிருந்து, நான்கு மணி நேரம் நிச்சயமாக ஆகும். விழா நடக்கிற திடலில் மாவட்டக் கழகம் வாரியாக, தனித்தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அந்தந்தக் கழக மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அவர்களுக்கான இடத்தில் உட்காருவதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

நம்முடைய தலைவர் அவர்கள் இறுதியாகச் சிறப்புரையாற்ற இருக்கிறார்கள். தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும், என்னென்ன மாதிரியான பணிகளை இளைஞர் அணி மேற்கொள்ள வேண்டும் என்று தலைவர் அவர்கள் நமக்கு அறிவுரை வழங்குவார்கள். மாலை 4 மணி அளவில் ஆரம்பிக்கின்ற நிகழ்ச்சி நிச்சயம் 7:30 மணி அளவில் அனைத்து நிகழ்ச்சிகளும் முடிந்துவிடும். இது மாநாடு கிடையாது, ஒரு சந்திப்புதான். அதனால், ஒரு முழுநாள் நிகழ்ச்சி கிடையாது. அதற்கு ஏற்றதுபோல் நீங்கள் உங்களின் பயணத்தைத் திட்டமிட்டுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்வது, வருகைப் பதிவேடு மிக மிக முக்கியம். எத்தனை நிர்வாகிகளை நியமித்திருகிறோமோ அத்தனை பேரும் நிச்சயமாக வர வேண்டும். இதில் எங்களுக்கும் நிச்சயம் பங்கு உண்டு. எங்களுடைய கடமையும் இருக்கிறது. ஏனென்றால் நீங்கள் கொடுத்த பட்டியலை நாங்கள் அப்படியே போடவில்லை. அதைச் சரிசெய்திருக்கிறோம் என்று சொல்லி, உங்கள் பட்டியலில் சில மாற்றங்களைச் செய்துதான் நியமித்துள்ளோம். எனவே உங்களுக்கு எந்தளவுக்குக் கடமை இருக்கிறதோ, அதே அளவுக்கு எங்கள் அன்பகம் குழுக்கும் அந்தக் கடமை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் நினைவு கூற விரும்புகிறேன்.

திடலுக்கு வருவதற்கு முன்பு அவர்களுக்கு கழகக் கட்டுப்பாட்டை எடுத்துச் சொல்லி அழைத்து வாருங்கள். நிகழ்ச்சி முடிகிறவரைக்கும் கலைந்து போய்விடாமல் தலைவர் உரையாற்றிய பின்புதான் யாராக இருந்தாலும் அங்கிருந்து கலைந்து செல்ல வேண்டும். பொதுமக்களுக்கு எந்தவிதமான ஒரு இடையூறும் இருக்கக் கூடாது. ஏனென்றால், ஏதாவது தவறு நடந்தது என்றால், பார்த்தீர்களா இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பிலேயே இவ்வளவு பிரச்சினை செய்திருக்கிறார்கள், பொதுமக்களுக்கு இவ்வளவு கஷ்டம் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று செய்தி தொலைக்காட்சிகள் அவற்றை பூதாகரமாக ஊதி செய்தி போட்டு, விமர்சனம் செய்வார்கள். ஆகவே இதற்கெல்லாம் நாம் ஒரு துளிகூட வழிவகை செய்துவிடக் கூடாது.

### 2026 சட்டமன்றத் தேர்தல்

எப்படி 2024 மக்களவைத் தேர்தலின் போது நம்முடைய சேலம் இளைஞர் அணி மாநாடு தேர்தல் வெற்றிக்கு அடித்தளமாக இருந்ததோ, அதே மாதிரி நாம் நடத்த இருக்கக்கூடிய இந்த மண்டல அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு ஓர் அடித்தளமாக நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு நீங்கள் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பணி என்பது இந்த நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியோடு முடியப் போவதில்லை. 2026 சட்டமன்றத் தேர்தலின் வெற்றியை உறுதி செய்வதுதான் நம்முடைய இலக்கு. கழகத்தின் வலிமையை, எதிர்காலத்தை மேன்மேலும் உறுதி செய்வதற்கான பணிதான் இந்த நிர்வாகிகள் சந்திப்பு என்பதை நீங்கள் உணர வேண்டும்.

ஆகவே இந்தச் சந்திப்பை மற்ற இயக்கங்கள், மற்ற மாநிலங்கள், மற்ற தலைவர்கள், ஒன்றியத்தில் இருக்கக்கூடிய முக்கிய கட்சிகள் எல்லாம் திரும்பிப் பார்க்கின்ற அளவுக்கு இந்தச் சந்திப்பை நாம் நடத்தி, வெற்றிகரமாகவும் எழுச்சியோடும் நடத்திக் காட்ட வேண்டும். அதற்கு உங்களுடைய உழைப்பு, ஆதரவு மிக மிக முக்கியம்.

இந்தக் கூட்டம் முடிந்த பிறகு நானும், நம்முடைய அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களும் ஒவ்வொரு மாவட்டச் செயலாளரையும், மாவட்ட அமைப்பாளரையும் தனித்தனியாகச் சந்தித்து, உங்களிடத்தில் ஏற்கனவே ஒரு பேப்பர் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் யார் யாரு, எந்தெந்த சட்டமன்றத் தொகுதியிலிருந்து எத்தனை பேரை அழைத்து வருகிறீர்கள். தொலைபேசி எண்கள், அவர்களின் டீ-ஷர்ட் அளவு, இதையெல்லாம் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் பூர்த்தி செய்து என்னிடத்திலும், நம்முடைய மாவட்டச் செயலாளர் அண்ணனிடத்திலும் கொடுங்கள். ஒவ்வொருத்தரையும் தனித்தனியாக இதற்குப் பிறகு சந்திக்க இருக்கிறோம். திருவண்ணாமலையில் கூடினோம், மீண்டும் வெற்றியோடு திரும்பினோம் என்ற வரலாற்றை நாம் படைத்தாக வேண்டும். அதற்கு இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு, 2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கான சாட்சியாக இருக்க வேண்டும்.

வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. அனைவரும் வந்தமைக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சக்கரபாணி, இராஜேந்திரன், காந்தி, மா.சுப்பிரமணியன், சேகர் பாபு, ஆவடி நாசர், கழகப் துணைப் பொதுச் செயலாளர்கள் பொன்முடி, அந்தியூர் செல்வராஜ், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரணி வேந்தன், எஸ்.ஆர்.எஸ்., டி.எம்.செல்வகணபதி, மணி, அண்ணாதுரை, கிரி, சரவணன், அம்பேத்கும்மார், ஜோதி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் சுந்தர், மாதவரம் சுதர்சனம், நந்தகுமார், மஸ்தான், உதயசூரியன், பிரகாஷ், வசந்தம் கார்த்தி, ஆர்.டி.சேகர், தேவராஜ், பழனியப்பன், மதியழகன், சிற்றரசு, சந்திரன், மயிலை த.வேலு, கௌதம் சிகாமணி, மருத்துவர் இலட்சுமணன், ரமேஷ் ராஜ், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் ஜோயல், இன்பா ரகு, இளைய ராஜா, அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், சீனிவாசன், ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் எவரெஸ்ட் நரேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர் ராஜா மற்றும் நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.




